தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 25, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2025

1994, நவம்பர் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள"

காக்கைகள் தமது இரையை மறைத்து வைக்காமல் தம் இனத்தைக் கூவி அழைத்து அவ்வினத்தோடுகூட சேர்ந்திருந்து உண்ணும். அப்படிப்பட்ட இயல்புடையவர்க்கே ஆக்கமும் பலவும் ஏற்படும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

81—

குழித்துறை, தக்கலை கிளைச் சிறைச்சாலை காவலர்களுக்கு வசதி அளித்தல்.

*20335—**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, தக்கலை கிளைச் சிறைச்சாலைகளில் காவலர்களுக்குப் போதிய வசதிகள் இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1994 நவம்பர் 10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை/தக்கலை கிளைச் சிறைகளில் காவலர்கள் பணியாற்றப் போதிய வசதிகள் உள்ளன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை, குழித்துறையில் இருக்கின்ற கிளைச் சிறைச்சாலைகளில் பணிபுரியும் காவலர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி இல்லை என்ற ஒரு கோரிக்கையைக் கூறியுள்ளார்கள். எனவே, அவர்கள் தங்குவதற்கு வீடு கட்டி வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல குழித்துறை, தக்கலை ஆகிய இடங்களிலுள்ள கிளைச்சிறைச்சாலைகளில் பணிபுரிவோருக்கு இன்றைக்கு குடியிருப்பு வசதிகள் இல்லை. அந்தக் குடியிருப்பு வசதிகளைச் செய்துதர அரசு முனைப்பாக காரியங்களை மேற்கொண்டு இருக்கிறது. குறிப்பாக, அந்த நிலம் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்டுக்குச் சொந்தமானது. அவர்களிடத்திலே இடத்தைக் கேட்டு, அதற்காக அரசு முயன்று கொண்டிருக்கிறது. அது அல்லாமல் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றையதினம் 8 மத்திய சிறைச்சாலைகள் இருக்கின்றன. 200-க்கும் மேற்பட்ட சப்-ஜெயில்கள் இருக்கின்றன. இவைகளில் 3,276 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களிலே இன்றையதினம் 793 பேருக்கு மட்டுமே குடியுருப்பு வசதிகள் இருக்கின்றன. மிகுதியாக இருக்கிற 2,483 பேருக்கு குடியிருப்பு வசதியைச் செய்துதர, நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அண்மையிலே வந்த பத்தாவது பைனான்ஸ் கமிஷனிடத்திலே நிதி கோரி நாங்கள் மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். அத்தோடு அது நிலுவையில் இருக்க, வருகின்ற வரையில் இதனை ஈடுசெய்ய நமக்கென தமிழ்நாடு போலீஸ் அவுசிங் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பு

இருக்கிறது. அதன்-மூலமாக இந்த 2,483 காவலர்களுக்கு, பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி செய்துதர, வீடு கட்டித் தர தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் முயன்று கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 2,486 காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்றும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்றும் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமில்லாமல், குழித்துறை, தக்கலையில் உள்ளவர்களுக்கு தண்ணீர் வசதி போதவில்லை என்று கூறுகிறார்கள். நாம் எங்கு வேண்டுமானாலும் தண்ணீர் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படியிருந்தும் அவர்களுக்குத் தண்ணீர் வசதி போதவில்லை என்றும், ஒழுங்காக சப்ளை செய்யப்படவில்லை என்றும் ஒரு புகாரைக் கூறினார்கள். எனவே, கருணைகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தண்ணீர் தட்டுப்பாட்டை உடனடியாகத் தீர்க்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

82—

மெலட்டூர் அரசு மருத்துவமனையிலுள்ள எக்ஸ்ரே இயந்திரத்தைச் செப்பனிடுதல்

21252*—திருமதி கே. பஞ்சவர்ணம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—